# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2025 (2026)

## இப் பரீட்சைக்காக சகல விண்ணப்பதாரிகளும் நிகழ்நிலையிலேயே (online) விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

மேற்படி பரீட்சைக்குத் தனிப்பட்ட முறையில் தோற்றுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் 2025 செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதி தொடக்கம் 2025 ஒக்டோபர் மாதம் 09 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் இவ் அறிவித்தலை முழுமையாக நன்கு வாசித்து விளங்கிக் கொண்டு, தமது விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலையில் (Online) பூரணப்படுத்திச் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தெரிவு செய்த நகரத்தையும் பாடங்களையும் சரியாக குறிப்பிடுவதில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

02. **விண்ணப்பப்படிவங்கள்**

2.1 நிகழ்நிலையில் விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தி சமர்ப்பித்த பின்னர் அதன் PDF ஆவணத்தை அச்சுப் பிரதியெடுத்து வைத்துக்கொள்வது கட்டாயம் என்பதுடன், தேவையேற்படின் அதனை சமர்ப்பிப்பதற்காக பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். அச்சுப் பிரதியை திணைக்களத்துக்கு அனுப்பத் தேவையில்லை.

அரச பாடசாலையொன்றில் கற்றுக்கொண்டே தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தோற்றுவது கண்டறியப்படின் பரீட்சைப் பெறுபேறு இரத்துச் செய்யப்படுவதுடன் எதிர்காலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் தடை விதிக்கப்படும்.

2.2 2025 ஒக்டோபர் 09 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்குப் பின்னர் இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியாது.

2.3 ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே சமர்ப்பிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்படின் சகல விண்ணப்பப்படிவங்களும் இரத்துச் செய்யப்படும் என்பதுடன், அப்பரீட்சார்த்தி தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகளை வழங்கிய பின்னராயினும் இவ்வாறான முறைகேடான செயல் உறுதிப்படுத்தப்படின் பெறுபேற்றை இரத்துச் செய்து உரிய சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

03. முறைமைக்குள் பிரவேசிப்பதற்கும் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்குமான தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள்

3.1 விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்வதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின்.
- உத்தியோகபூர்வ இணையதளமான (https://doenets.lk) இற்குப் பிரவேசித்து எமது சேவைகள்" இன் கீழுள்ள "Exam Information Centre" என்பதைச் சொடுக்கவும் (click) அல்லது
- http://onlineexams.gov.lk/eic இற்குள் பிரவேசிக்கவும்.

3.2. முதலில் உங்கள் பெயர். தேசிய அடையாள அட்டை எண். தொலைபேசி எண் என்பவற்றை உள்ளடக்கி பதிவு செய்து கொள்ள வேண்டும்.

3.3 தேசிய அடையாள அட்டை எண்ணை உள்ளிட்ட பின்னர் உங்களுக்குக் கிடைக்கப்பெறும் குறுஞ்செய்தியில் (SMS) குறிப்பிடப்பட்டுள்ள குறியீட்டு எண்ணை (OTP) பயன்படுத்தி முறைமைக்குள் பிரவேசிக்க வேண்டும்.

3.4 அறிவுறுத்தல்களுக்காக "Instructions" எனும் பொத்தானைத் தெரிவு செய்க. தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள், பொது அறிவுறுத்தல்கள், அறிவுறுத்தற் காணொளி (Video) ஆகியவற்றைப் பார்வையிட்ட பின்னர் "Next" பொத்தானைத் தெரிவு செய்து விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யத் தொடங்குக.

04. பரீட்சைக் கட்டணம் செலுத்துதலும் விண்ணப்பப்படிவத்தைத் தரவிறக்கம் (Download) செய்தலும்

பரீட்சைக் கட்டணத்தைத் தபால் அலுவலகத்தின் மூலமோ வங்கி அட்டைகள் (Credit / Debit Payment) மூலமோ செலுத்த வேண்டும்.

4.1 தபால் அலுவலகத்தின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுமாயின் "Payment method" இன் கீழுள்ள "Pay by Department of Post" எனும் இணைப்பைத் தெரிவு செய்ய வேண்டும்.

அங்கு உங்களுக்குக் கிடைக்கப்பெறும் Reference number ஐ தபால் அலுவலகத்திற்கு வழங்கி உங்களது பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும்.

அப் பற்றுச் சீட்டில் "க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை 2025(2026) பரீட்சைக் கட்டணம்" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

கொடுப்பனவு பூர்த்தியடைந்த பின்னர் உங்களுக்குக் கிடைக்கப்பெறும் குறுஞ்செய்தியிலுள்ள இணைப்பைச் (link) செயற்படுத்துவதன் மூலம் உரிய வலைத்தளத்துக்குள் பிரவேசித்து விண்ணப்பப்படிவத்தைத் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

4.2 வங்கி அட்டைகள் (credit/debit cards) மூலம் பணம் செலுத்துவதற்காக "Payment method" இன் கீழுள்ள "Pay by credit/debit card" உருப்படியைத் தெரிவு செய்தல் வேண்டும்.

4.3 பரீட்சைக் கட்டணம் பின்வருமாறு அமையும்.

| பாட எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 | 6-9 |
|---|---|---|---|---|---|---|
| கட்டணம் (ரூபா) | 100/- | 150/- | 200/- | 250/- | 300/- | 350/- |

05. நீங்கள் தெரிவு செய்யும் பாடங்களும் நகரமும் மிகவும் முக்கியமானது. ஏதேனும் ஒரு நகரத்தில் பரீட்சை நிலையத்தை அமைப்பதற்குப் போதுமான பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து அவர்கள் அண்மையிலுள்ள நகரத்தில் அமைக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவர்.

06. உங்கள் அனுமதி அட்டை கிடைத்தவுடன் உடனடியாக அனுமதி அட்டையிலுள்ள பெயர், பாடம், மொழிமூலம் என்பவற்றில் திருத்தங்கள் செய்யவேண்டியிருப்பின் அவற்றை நிகழ்நிலையில் செய்து கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

07. தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தமது தனிப்பட்ட தொலைபேசி இலக்கத்தையும் நிரந்தர வதிவிட முகவரியையும் குறிப்பிட வேண்டும். ஆனால் தாம் கல்வி கற்கும் தனியார் அல்லது சர்வதேச பாடசாலையின் பெயர், முகவரியைக் குறிப்பிடக் கூடாது.

08. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல்**

பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றில் ஏதேனுமொன்றைக் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும். இது பரீட்சைக்குத் தோற்றும் சகல வினாப்பத்திரங்களுக்கும் கட்டாயமானது.

09. நீங்கள் இப் பரீட்சைக்கு விசேட தேவையுடைய விண்ணப்பதாரியாக விண்ணப்பிப்பதாயின் "Are you a special needs candidate? இல் "Yes" இன் கீழுள்ள தகவல்களைப் பூர்த்தி செய்வது கட்டாயமானது.

10. விசேடமாகக் கவனத்திற் கொள்ள வேண்டியவை

10.1 இப் பரீட்சைக்கென செலுத்தப்பட்ட கட்டணம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மீளளிக்கப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கான கட்டணமாக மாற்றப்படவோ மாட்டாது.

10.2 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்த பின்னர் எக்காரணத்திற்காகவும் விண்ணப்பித்த பரீட்சை நிலையம் மாற்றம் செய்யப்படமாட்டாது. எனவே உங்கள் விண்ணப்பப்படிவத்தைச் சரியாகப் பூர்த்தி செய்ய வேண்டும்.

10.3 இரண்டாம் பாடத்தொகுதிக்குரிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இத்தேவையைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியிருப்பினும் அப்பாடத்துக்கான பெறுபேறு வழங்கப்படமாட்டாது.

(40) சங்கீதம் (கீழைத்தேயம்)
(41) சங்கீதம் (மேலைத்தேயம்)
(42) சங்கீதம் (கர்நாடகம்)
(44) நடனம் (சுதேச)
(45) நடனம் (பரதம்)
(50) நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)
(51) நாடகமும் அரங்கியலும் (தமிழ்)
(52) நாடகமும் அரங்கியலும் ஆங்கிலம்

மேற்படி விடயம் தொடர்பாக மேலதிக தகவல்கள் ஏதேனும் தேவைப்படின் பின்வரும் மின்னஞ்சல் முகவரி ஊடாக அல்லது தொலைபேசி எண்கள் ஊடாக தொடர்பு கொள்ளவும்.

**மின்னஞ்சல் முகவரி** : **gceolexamsl@gmail.com**
**தொலைபேசி எண்கள்** : **0112784208/0112784537/ 0112785922**
**நிகழ்நிலை அலகு** : **011-3661122/011 - 3671568**

**தொடர் இல.: 6/4/OL/2025(2026)**

**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**த.பெ.இல 150, கொழும்பு.**
**2025.09.18**

**ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே,**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**